**O.S.No. 198/2022 நாள் 10.04.2026 DW 1 – திரு. மாரிமுத்து**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (வாதிதரப்பில்)

நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் எப்போது இருந்து குடியிருந்து வருகிறேன் என்றால் பிறந்ததிலிருந்தே குடியிருந்து வருகிறேன். நான் வெளியூரில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7 ஆம் வகுப்பு படித்துள்ளேன். சொத்தை பதிவு செய்வது பற்றிய நடைமுறைகள் தெரியுமா என்றால் தெரியாது. தபசில் சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 2 வீடு மேலேயும், கீழேயும் உள்ளது. நிரூபணவாக்குமூலத்தில் தபசில் சொத்தில் ஒரு வீடு இருப்பதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் மேலேயும், கீழேயும் உள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் கதவு எண் வேறு வேறு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் எத்தனை வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் கதவு எண். 3,4,5 என 3 வீடுகள் உள்ளது. வா.சா.ஆ–2 ஆவணத்திலும் 3 வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனுடைய கதவு எண்கள் 5, 5/1, 5/2 என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்த பத்திரமான வா.சா.ஆ–3 ஆவணத்திலும் 3 வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–4 ஆன செட்டில்மெண்ட் பத்திரத்திலும் 3 வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–2 ஆவணத்தில் தபசில் சொத்தானது எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றுதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் பெயருக்கு பட்டா 936 ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்ட காலம் 28.05.2020 என்றால் சரிதான். நான் தாக்கல்

செய்த பி.வா.சா.ஆ–4 ஆன பட்டாவை நிரூபணவாக்குமூலத்தில் 06.09.2022 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–4 ஆவணத்தில் எந்த தேதியும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–4 எனது தாயார் இறப்பிற்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட போலி ஆவணம் என்றால் சரியல்ல. உயில் ஊர்ஜிதத்திற்கு முன்பே என் பெயரை பட்டாவில் சேர்த்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–3 ஆவணத்தில் பட்டாப்படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து பாட்டி பொன்னாச்சி அம்மாளின் கிரைய சொத்து என்றால் சரிதான். எனது தாயார் பேச்சியம்மாள் கிரையம் வாங்கியது கிடையாது என்றால் சரிதான். வாதிகளுக்கும், எங்களுக்கும் இது மூதாதையர் சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்து குறித்து உயில் எழுத பேச்சியம்மாள் உரிய மனநிலையிலும், உடல்நிலையிலும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணம் எனது தாயாரால் எழுதி வைக்கப்பட்டது. உயில் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனது தாயார் பேச்சியம்மாளுக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனது அப்பாவும், அம்மாவும் சேர்ந்துதான் சென்று எழுதினார்கள். எனது அப்பாவும், அம்மாவும் சேர்ந்துதான் சென்று எழுதினார்கள் என்று உயில் ஆவணத்தில் எதிலாவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. எனது அம்மாவிற்கு படிப்பறிவு கிடையாது. பி.வா.சா.ஆ–2 உயில் ஆவணத்தில் முதல் பக்கத்தில் எனது அம்மாவின் ரேகை எதுவும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 உயில் ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்தில்நேரில் சமர்ப்பித்தார்கள் என்று எந்த வாசகமும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–2 உயில் ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்ட போலி ஆவணம் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பங்கை கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான்

பி.வா.சா.ஆ–2 ஐ உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ–2 ஆவணம்குறித்து எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் எனது அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது தெரியவந்தது. எனது அம்மா உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது தெரியவந்தது என்று எதிர்வழக்குரையிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு சொத்தில் பங்கு கொடுக்க கூடாது என்றும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆரம்பத்திலேயே இருந்தது என்றால் சரியல்ல. அதனால்தான் எனது தாயாரின் இறப்பிற்கு முன்னரே பட்டாவில் என் பெயரை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. உயில் ஊர்ஜிதத்திற்கு முன்பே எனது மகனுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியுள்ளேன் என்றாலும், மறுபடி பொய்யான காரணங்களை சொல்லி அந்த செட்டில்மெண்டை ரத்து செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ–2 ஐ தயார் செய்து அதற்கு அப்புறம்தான் மீண்டும் எனது மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகனுக்கு எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ–5 ஆவணமும் செல்லாத ஆவணம் என்றுசொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ–4 ஆவணத்தின் தேதியை தவறாக காண்பித்து நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சுத்தகரத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. வாதியை பங்கை கொடுக்கக்கூடாது என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வாதிகளுக்கு தபசில் சொத்தில் அவர்களுக்குரிய பங்கை கொடுக்க வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. மறுவிசாரணை இல்லை.